

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, புடவைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு. சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன். நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ். மதன்மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருவான்மியூர் பாம்பன் சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார்.



சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று (15.08.2025) சென்னை, வில்லிவாக்கம் சௌமிய தாமோதரப்பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.



சென்னை தங்கசாலைத் தெரு, ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில், நேற்று (15.08.2025) போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் கலந்துகொண்டார்.



சென்னை பூங்கா நகர், கந்தசாமி (எ) முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலில், நேற்று (15.08.2025) தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் கலந்து கொண்டார்.



சென்னை திருவான்மியூர், மருந்தீசுவரர் திருக்கோயிலில், நேற்று (15.08.2025) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் கலந்து கொண்டார்.



சென்னை இராயப்பேட்டை, சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில், நேற்று (15.08.2025) சட்டபேரவைத் தலைவர் மு. அப்பாவு சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் கலந்து கொண்டார்.



சென்னை எல்டாம்ஸ் சாலை, பாலசுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயிலில், நேற்று (15.08.2025) தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் கலந்து கொண்டார்.



சென்னை மேற்கு தாம்பரம், செல்வ விநாயகர் மற்றும் கோதண்டராமர் திருக்கோயிலில் நேற்று (15.08.2025) தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் கலந்து கொண்டார். இதில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.




சென்னை, கீழ்பாக்கம், பாதாள பொன்னியம்மன் திருக்கோயிலில் நேற்று (15.08.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது பொது விருந்தில்கலந்து கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், வசந்தி பரமசிவம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கு 6 புதிய திட்டங்களை அறிவித்ததைத் தொடர்ந்து, நேற்று (15.08.2025) இராயபுரம் மண்டலம், (மண்டலம் 5), 57ஆவது வட்டத்தில் உள்ள அண்ணா தெரு, கொத்தவால்சாவடி அருகில், 5ஆவது மண்டலத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் ஒன்று கூடி நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கு 6 புதிய திட்டங்களை அறிவித்ததைத் தொடர்ந்து, நேற்று (15.08.2025) இராயபுரம் மண்டலம், (மண்டலம்5), 57ஆவது வட்டத்தில் உள்ள அண்ணா தெரு, கொத்தவால்சாவடி அருகில், 5ஆவது மண்டலத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் ஒன்று கூடி நன்றி தெரிவித்து, பதாகைகள் ஏந்தி அணிவகுத்துச் சென்றனர். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.